காஞ்சி

விலை 20 காசு

17-12-67

[illegible] 17.12.67.

திருநெல்வேலி மாவட்ட தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்

ஏ. வெள்ளத்துரை,
வாசுதேவநல்லூர்.

ஆலடி அருணா,
ஆலங்குளம்.

எம். இரத்தினசபாபதி,
விளாத்திகுளம்.



பி. துரைராசன்,
சங்கரன்கோயில்.

எ[illegible]

கலைஞனின் கனவு

கரந்தை—கணேசன்

(உருவகம்)

... கரையோ ... ட்டமில் ... ச் சிற்பி ... டித்தான். ... ாகக் கூறி ... விர, அந்தச் ... அவன் வடித்த ... லகள், சிந்தித்த ... யத்தனை யெத்தனை? ... யாத இரவுகள் ஓயாது ... விழித்து விழித்துச் சித்தம் ... திருக்கிறான், சிந்தித்து முடித் ... கிறான். இவ்வளவுக்கும் பிறகு தான் மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண்துஞ்சாது, கடமையே கடன் எனக் கொண்டு தன் எண்ணத்தின் ஒவ்வொரு அணுவையும் உருவாக்கினான், அந்தச் சிலையாக. இத்தனைக்கும் அவன் மனம் மொத்தமாக வேண்டியது, இந்தச் சிலைபோல் வேறு சிலை இவ்வுலகிலேயே இல்லை என்று பிறர் கூறி மகிழவேண்டும் என்பதுதான். தன்னுடைய கலைத்திறன் பிறருக்குக் களிப்பை நல்கவேண்டும் என்பது தான்!

சிலை வடிவெடுத்தது. உருவெடுத்த அந்த உள்ளங்கவர் சிலைக் குமரியைச் சிற்பி பலப்பல கோணங்களிலே நின்று கண்டான். மற்றவர் குறை கூறிவிட்டால், குறை உண்மையிலேயே குறையாக இருந்துவிட்டால் தன் பன்னெடு நாட்களின் உழைப்பு, உதவாக் கதையாக அல்லவா ஆகிவிடும்? என்ற எண்ணத்தால் பார்த்தான். அவன் எந்த முனையிலே இருந்து பார்த்தாலும் அந்தச் சிலை எழிலே கொட்டியது; ஏற்றம் காட்டியது.

சிலையை வடிக்கப்பட்ட இடத்தை விட்டு, அதே சிற்றாற்றின் கரையிலேயே இரவோடு இரவாக மனித நடமாட்டம் உள்ள இடத்திற்கு மாற்றினான். அதேபோது, சிலை வடித்த சிற்பியும் மறைந்தான்.

மக்கள் கண்டு மகிழும்போது தான் அங்கே இருக்கக் கூடாது. இருந்தால் அந்த மகிழ்ச்சியே தனக்குப் புகழ்ச்சியாகமாறித் தன்னை மமதையாளனாக மாற்றிவிடும்; அதனால் தன் கலை அழியும் என்ற எண்ணத்தால் சிற்பி எங்கோ சென்றான். சென்ற இடமெல்லாம் தன் கலைத் திறனை—சிற்பநுட்பத்தைக் காட்டினான். எனினும் முன்னர் வடித்த அந்தச் சிலைபோல வேறுசிலைவடிக்க முடியவில்லை. வடிக்கின்ற சிலைகளும் அந்தச் சிலையின் சாயலையே கொண்டிருந்தன. காரணம்? அவன் எண்ணம் பூராவும் எத்தனையோ காதங்கள் கடந்து வந்திருந்தும் முன்பு தன் முழுத் திறனையும் கொண்டுவடித்த அந்தச் சிலையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்ததுதான்.

ஒருமுறையாவது போய்ப் பார்த்து வருவோமே! என்ற நினைவு தொடர் நிழலாக ஆண்டுகள் சில ஓடிய பிறகுத் தேடிவந்தான், தான் சிலையை விட்டுவிட்டுச் சென்ற இடத்தை நோக்கிச் சென்றான். அங்கே அவன் வடித்த சிலையைக் காணவில்லை. அதற்குப் பதிலாக அவ்விடத்திலே புதிய பெரிய கோயில் ஒன்று இருந்தது. அதில் ஒரே கூட்டம் மக்கட் பெருவெள்ளம்.

கோயிலுக்குள் போய்க்கொண்டிருந்த கூட்டத்திடம் சென்று, ஒருவரை நோக்கிக் கேட்டான், "சில ஆண்டுகட்கு முன் இந்த நதிக்கரையிலே இருந்ததே ஒரு சிலை" என்று.

அதற்கு அவர், 'இது தெரியாதா உங்கட்கு? அந்தச் சிலைதான் இந்தக் கோயிலுக்குள்ளே இருப்பது. அதன் மகத்துவமே தனிதான் போங்கள்!" என்றார்.

சிற்பிக்குச் செந்தேனைத் தன் வாயிலே ஊற்ற, அது உள்ளமெல்லாம் இனிப்பதுபோல இருந்தது. மேலும் எதையும் அவரிடம் வினவி அறியவேண்டும் என்ற எண்ணமே இல்லை. அறிந்துகொண்டு சென்று கண்டால், அதிலே கவின் இருக்காதல்லவா? சிலையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் முந்த, சிற்பியின் கால்கள் முந்த, "ஆகா, நாம் கலையைச் சிலையாக வடித்தோம், மக்களோ அச்சிலைக்குக் கலைக் கோயிலே கண்டுவிட்டார்கள். அக் கோயிலிலே நம் கலைக்குமரியின் கொலு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்" என்ற எண்ணக் குமிழிகள் எழக் கோயிலுக்குள்ளே ஓடினான். அங்கே! சிற்பி வடித்த சிலை இருண்ட குகையிலே எழிலிழந்து பொலிவிழந்து. கார்மேகமாய்க் காட்சியளித்தது. அதைக் கண்டவுடன் மன்னன் ஒருவன் கட்டிய மாளிகை அவன் கண் முன்பே மண்மேடாகிக் கொண்டிருந்தால் அவன் மனம் எப்படி இருக்குமோ அப்படி ஆயிற்று, சிற்பியின் நிலை.

அவனையும் அறியாமல் ஓங்கிக் கத்திக்கொண்டே ஓடினான் சிலையை நோக்கி. 'என் எண்ணத்தின் முழு உருவே உனக்கா இந்த முக்காட்டு நிலை" என்று. அதற்குள் அங்குள்ளோரில் சிலர் அவனைப் பிடித்துக் கொண்டனர்.

"ஏன் என்னைத் தடுக்கிறீர்கள்?" என்றான்.

"அப்படியானால் என் சிலை' அதனை யார் காப்பது?" என்றான் சிற்பி.

"சிலையா? இது கடவுளப்பா—தெய்வமங்கை, அவள் நம்மைக் காக்க இருக்க, அவளை நீ காப்பதா? என்ன பேத்தல்?" என்றனர்.

"இல்லை வெறும் கல். நான் வடித்த சிலை" என்றான்.

அங்குள்ளோர் அனைவரும் இவனை வெறிக்கப் பார்த்தனர். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

பின்னர். எல்லோரும் ஏகமனதாக "இவன் பைத்தியக்காரன், அம்மன் சிலையை உடைத்தாலும் உடைத்து விடுவான்" என்று கூறியவாறே கோயிலுக்கு வெளியே கொண்டு வந்து தள்ளினர்.

சிற்பி ஏதேதோ சொன்னான், என்னென்னவோ பேசினான். பின் தன்னை மறந்து சிரித்தபடியே நகர்ந்தான்!

காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10   ஆறுமாதம் ரூ. 5

மலர் 4   17—12—67   இதழ் 21

சங்ககிரி இடைத் தேர்தல்

வருகிற 20—12—67 புதன்கிழமையன்று சங்ககிரி இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. கழக சட்ட மன்ற உறுப்பினர் நல்லமுத்து காலமானதை முன்னிட்டு நடைபெறும் இடைத்தேர்தல் இது. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டபின் நடைபெறுகிற மூன்றாவது தேர்தல்.

பொதுவாக இடைத்தேர்தல் என்றாலே வாக்காளர்களில் பெரும்பாலோர், போதிய அக்கறை காட்டுவதில்லை. கடந்த கால வரலாறுகளிலிருந்து இத்தகைய அக்கறையின்மை காரணமாக காங்கிரஸ் கட்சி இலாபமடைந்து வந்திருக்கிறது என்பதை உணர முடியும்.

சங்ககிரி தேர்தல், ஒரு முக்கியமான கட்டத்தில் நடைபெறவிருக்கிறது. இத்தேர்தலில், ஆளும் கட்சியாக இருக்கிற தி. மு. கழகத்தின் வெற்றி, கழகம் மொழிக் கொள்கையில் தன் இலட்சியத்தை வெளிப்படுத்திக் காட்டுகிற இலச்சினை என்று மதிக்கப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

டெல்லி நாடாளுமன்றத்தில், இப்போது ஆட்சி மொழித் திருத்த மசோதா தொடர்பான ஷரத்துவாரி விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

யாருக்காக கடந்த காலப் பிரதமர்கள் வாக்குறுதியளித்து, அவர்தம் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்டதோ, அப்படிப்பட்டவர்களுக்கு எதிராகக் காங்கிரஸ் கட்சி, மசோதாவுக்குச் சில திருத்தங்களையும் தந்து மசோதாவின் அடிப்படையையே தகர்த்துவிட்டிருக்கிறது.

மசோதாவின் குறைந்த பட்ச பலன்களைக்கூட நாம் பெற்றுக்கொள்ள முடியாத சில திருத்தங்களைத் தந்து, அவை மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளவும் பட்டிருக்கிறது.

இந்நிலையில், இந்தி பேசாத பகுதி மக்கள் அம்மசோதாவை ஆதரிப்பதில் பயனில்லை என்பதை திட்டவட்டமாக உணர்ந்து, அறிஞர் அண்ணா அவர்களும், அம்மசோதா கழகத்தால் எதிர்க்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

இந்தி வெறித்தனத்துக்கு முற்றிலும் தன்னை அடிமையாக்கிக் கொண்டுவிட்ட மத்திய அரசு, எதிர்ப்புக் குரலை கொஞ்சமாவது செவிமடுக்காமல், யதேச்சாதிகார முறையில் நடந்துகொண்டு விட்டிருக்கிறது.

இம்மாதிரியான ஏகாதிபத்தியப் போக்கு இனியும் அனுமதிக்கப்படுமானால், எதிர்கால இந்தியா, இந்தி பேசுவோரின் ஆதிக்கக் கோட்டையாக்கப்பட்டுவிடும் என்பதை அறிவாளர்கள் பலரும் தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

சங்ககிரி இடைத் தேர்தல் போன்ற நிகழ்ச்சிகளை வைத்துத்தான் ஆளும் கட்சி, மக்களின் எதிர்ப்புக்குரலை ஏகாதிபத்தியவாதிகளுக்கு எடுத்துக் காட்டியாக வேண்டும்.

மத்திய அரசு, முதலாவதாகத் தயாரித்த திருத்த மசோதா நகல், எவ்வித திருத்தமுமின்றி ஏற்கப்பட வேண்டும் என்பதை, காலங் கடந்த பின்னராவது காமராசர் எடுத்துக் காட்டி இருக்கிறார். காமராசரது இந்த ஒப்புதல் வாக்கு மூலம் மூலமாக, தமிழகக் காங்கிரசின் கருத்து என்றும் அதனைக் கொள்ள முடியும்.

துரோகத்தனத்தில் தன் புகழைப் பொறித்துக் கொண்டுள்ள வடக்கு, தெற்கிலும் அதன் நீள்கரத்தை நீட்டிக் கொண்டிருக்கிறது.

நாட்டு மக்களுக்கு ஒருபுறம் வஞ்சக வலை விரித்துவிட்டு, இன்னொரு புறத்தில் தேர்தலில் நிற்கவும் காங்கிரசுக்கு முகம் இருக்கிறது என்றால், நாட்டு மக்களையும், வாக்காளர்களையும் எவ்வளவு இழிவாக அது கருதுகிறது என்றுதான் நினைக்கவேண்டி இருக்கிறது.

காமராசரது கருத்துப்படி, வடக்கத்திய காங்கிரஸ் தமிழர்களுக்கு வஞ்சகம் செய்கிறபோது, தெற்கத்திய காங்கிரசுக்கு தேர்தல் வெற்றி—எதற்காக நல்கப்பட வேண்டும்?

சங்ககிரியில் காங்கிரஸ் வெற்றிபெறுமானால், டில்லி அரசின் வஞ்சகப் போக்குக்கு தமிழகம் ஒப்பம் அளித்ததாக ஆகிவிடாதா? சங்ககிரி வாக்காளர்கள் இதற்குத் தயாராக இருக்கமாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும்.

சுமார் 15,000 வாக்குகள் வேறுபாட்டில் பிப்ரவரியில் கழகம் வெற்றிவாகை சூடிய தொகுதிதான் அது. கழகத்தின் இப்போதைய நிலைக்கு, மொழிப்பிரச்னை மட்டுமல்லாது, கழக அரசின் சாதனைப் பட்டியல்களும்கூட உறுதுணையாக இருக்கின்றன.

கழகத்தின் வெற்றி உறுதியென்றபோதிலும், அந்த எண்ணத்தால் ஏற்படுகின்ற மெத்தனம் நம்மை அதிரச் செய்வதாக ஆக்கிவிடக்கூடும்.

பொதுத்தேர்தலுக்குக் கோடிக்கணக்கில் சேர்த்த பணக்குவியல் பலத்தை நம்பி காங்கிரஸ் அங்கே போட்டியிடுகிறது. சாதனை பலத்தாலும், கொள்கை பலத்தாலுமே கழகம் போட்டியிடுகிறது என்பதை எழுதிக்காட்ட வேண்டியதில்லைதான்!

தற்காலிக ஏற்பாடு என்ற வகையில் சில வகை திருத்தங்களைத் தந்து ஒப்புக்கொள்வதாய்க் கூறப்பட்டு வந்த ஆட்சிமொழித் திருத்த மசோதா, இந்தி எதிர்ப்பாளர்களுக்கு எதிராக, காங்கிரசின் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டதனால், கழகம் அதனை ஏற்கப்போவதில்லை என்ற முதலமைச்சர் மாண்புமிகு அண்ணா அவர்களது கருத்துக்கு ஒப்புதல் தேடும் தேர்தலாகவே, சந்தர்ப்பச்சூழ்நிலை சங்ககிரி தேர்தலைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டது.

இம் மசோதா பற்றிய சிலபல கருத்துக்களை காங்கிரஸ் மாணவர் குழு என்ற பெயரில் சில காங்கிரசார், இந்திரா அம்மையாரிடம் சென்று எட்டப்பன் வேலை செய்து வந்திருக்கின்றனர். அந்தகாங்கிரஸ்தான்போட்டியிட வந்திருக்கிறது என்பதனையும் சங்ககிரி வாக்காளர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டிய பொறுப்பு கழகத்தவர்க்கு மிகுதியும் உண்டு.

எதிர்கால சுபிட்சம் என்ற நம்பிக்கை ஒளியின் பக்கம் மெள்ள மெள்ள அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த நம்பிக்கை நல்லவழி காட்டும்.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் 'காங்கிரஸ்' என்பது, அதன் பெருமை வாய்ந்த மிகப் பெரிய பாரம்பரியத்தை இழந்து, துரோகத்தின் பக்கம் சாய்ந்து கொடுத்துவிட்டதனால், இனி எதிர்காலத்தில் 'காங்கிரஸ்' என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை செயல் அளவில் நிருத்துக் காட்டுவதாக அமையட்டும் இந்தத் தேர்தல்!

அதற்கான ஆக்கப்பணிகளை அயராது செய்து, வேட்பாளர் வீரமணிக்கு வெற்றிமணி ஒலிக்கச் செய்வது கழகக் கண்மணிகள் கடமை என்பதில் மிகையில்லை.

காங்கிரசுக்குக் கிடைக்கின்ற தோல்வி, துரோகத்தனத்துக்குக் கிடைக்கின்ற தோல்வியாகும்.

காங்கிரசுக்குக் கிடைக்கின்ற தோல்வி, இந்தி வெறிக்குக் கிடைக்கின்ற தோல்வியாகும்.

காங்கிரசுக்குக் கிடைக்கின்ற தோல்வி, வடக்கின் ஏகாதிபத்தியத்துக்குக் கிடைக்கின்ற தோல்வியாகும்.

காங்கிரசுக்குக் கிடைக்கின்ற தோல்வி, பொய் புனைசுருட்டுகளுக்குக் கிடைக்கின்ற தோல்வியாகும்.

காங்கிரசுக்குக் கிடைக்கின்ற தோல்வி, ஆட்சி மொழி மசோதாவின் மீதான கழகத்தின் கருத்துச் சரியானது என்பதை எடுத்துக் காட்டுவதாகும்.

காங்கிரசுக்குக் கிடைக்கின்ற தோல்வி, ஜனநாயகத் தத்துவத்தின் சரிவை, சரியான பாதையில் திருப்பி விடத்தக்கதாகும்.

காங்கிரசுக்குக் கிடைக்கின்ற தோல்வி, "இந்தி தெரியாது என்று சொல்ல எவருக்கும் உரிமை இல்லை" என்று சொல்லும் துணிவு பெற்றுவிட்ட மாபாதகத் தன்மைக்குச் சவக்குழி காட்டும் சரியான தீர்ப்பாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக கழகத்தின் வெற்றி—வீரமணியின் வெற்றி, அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக்கு அளிக்கின்ற மகத்தான ஒப்புதல் வாக்கு மூலம் ஆகும்!

இடனறிந்து, செயலறிந்து முறையறிந்து பணியாற்றினால் போதும்! வெற்றி நமதே ஆகும்!!

✽

உள்ளிருக்கும் ஆபத்து!

"இந்தி பேசாத மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்குமிடையே — இந்தி பேசாத மாநிலங்களுக்கும் இந்தி பேசும் மாநிலங்களுக்கும் இடையே உள்ள கடிதப் போக்குவரத்துகளுக்கு—

ஆங்கிலம் மட்டுமே

பயன்படுத்தப்பட வேண்டும்,

"இந்தி பேசும் மாநிலங்கள், இந்தி மொழியில் கடிதப் போக்குவரத்து கொள்ளும்; இருந்தாலும், ஆங்கில மொழிபெயர்ப்பு உடன் வரும் அல்லது ஏற்பாடு செய்து கொள்ளலாம்."

என்ற பேச்சில் ஏதோ உட்பொருள் இருக்கிறது — ஆபத்து காணப்படுகிறது!

"இந்திப் பிரதி சரியான கருத்தா — மொழி பெயர்ப்பு சரியான கருத்தா—என்பன போன்ற விவகாரங்களெல்லாம் — சட்டப் பிரச்சினைகளெல்லாம் வேறு தோன்றும்!

"இதைத் தீர்த்துவைக்கும் அளவுக்கு நீதிமன்றங்களும் இந்திபற்றிப் பயிற்சி பெற்றிருக்கவில்லை!"

நூல் - மதிப்பு

அழகே வா!

(முதலிய கதைகள்)

ஆசிரியர்: கவிஞர் சேதரசு.

வெளியீடு: காந்திமதி பதிப்பகம், 10 ஆதிமூலம் பிள்ளை வடக்குத் தெரு, வனசங்கரி அம்மன் கோவில் வீதி, இராமநாதபுரம். விலை 1-00.

அழகே வா!, நெஞ்சில் நிறைந்தவள், ஓடாதே நில்! காதல் பிச்சை, தனிமை முதலிய ஐந்து சிறு கதைகளின் தொகுப்பே இந்நூல். ஏற்கெனவே பல இதழ்களில் வெளியானதன் மறு பதிப்பு.

இடம், பொருள், ஏவலுக்கும், இனம் முதலான தடைகளுக்கும் அப்பாற்பட்டது காதல், இந்தக் காதலை, பணக்காரப் பெண் ஒருத்திமீது படர விட்டு விட்டு, தன் முறைப்பெண்ணை வெறுத்து ஒதுக்கியவன், ஒதுக்கப்பட்டவளாலேயே வாழ்வு தரப்படுகிறான் என்ற கருத்து அழகே வா! என்ற கதையில் பின்னப்பட்டிருக்கிறது.

இன்னொன்றில், காதல் செய்வது என்றாலே தவறுகளைச் செய்வது என்று காட்டுவதுபோல தவறுகளைச் செய்தே, தன் நெஞ்சில் நிறைந்தவளை அடைகிறான்! நகைச் சுவைக் கதை. நன்றாகவே இருக்கிறது.

ஓடாதே நில்! ஒரு மனோதத்துவக் கருத்தை மையமாய்க் கொண்டு வடிக்கப்பட்டுள்ள நல்ல சுவையான—சிந்தனையைத் தூண்டும் படப்பிடிப்பு!

காதல் பிச்சையும் அப்படித்தான்! காதல் ஈடேற தந்தையரை ஏமாற்றும் விளையாட்டு! — சமூகம் சிந்தித்துத் தீரவேண்டும் என்பதற்கான ஒரு நல்ல விளக்கம்.

மொத்தத்தில், சிறுகதை இலக்கியத்தை வளர்த்துத் தீரவேண்டிய கடமையில் மூழ்கவேண்டிய தமிழ்ச் சமூகம், படித்தறிய வேண்டிய சில கருத்தோட்டங்கள் உள்ள ஒரு நல்ல படைப்பே இது.

விலை குறைவுதான்! எடுப்பான மேலட்டை இருந்திருந்தால், புத்தகப் பிரியர்களின் கண்களைப் பளிச்செனப் பறித்திருக்கும்.

இப்பன்ஸ் தத்துவம்!

—பழி—

அன்புள்ள நண்பா!

''ஆங்கிலம் ஒரு இணை மொழியாக நீடித்திருக்கும்; இந்தி மொழி புழக்கத்திலில்லாத மாநிலங்களின் மக்கள் விரும்பும்வரையில் ஆங்கில மொழியை அகற்றமாட்டேன்''

''ஆங்கிலத்தை ஒரு மாற்றுமொழியாக மக்கள் அதனை எத்தனைக் காலம் தேவையென வேண்டுகிறார்களோ அத்தனைக்காலம்வரை கொண்டிருக்க நான் விரும்புகிறேன்; இதுபற்றிய முடிவை நான் இந்தித் தெரிந்தவர்களிடம் விடமாட்டேன்; இந்தி தெரியாதவர்களிடமே விடுவேன்''

முன்னது நேரு இந்தியத் துணைக்கண்டத்து இந்தி பேசாத பகுதி மக்களுக்காகக் கொடுத்த வாக்குறுதி; பின்னது, 1959-ல் பாராளுமன்றத்தில் ஆட்சிமொழிச் சட்டம் தொடர்பான வாதத்திற்கு நேரு அளித்த பதில். நண்பா, இரண்டினையும் இணைத்து சிலதடவைகள் படித்துப்பார்!

மறைந்த நேருபிரானது வாக்குறுதிக்கு தாஷ்கண்ட் புகழ் லால்பகதூர் சாஸ்திரியார், மறுபடியும் உத்திரவாதமளித்தார். அதாவது ஆங்கிலம் நீடிக்கும் என்பதற்கும், அதனை இந்தி தெரியாத மக்கள், இருக்க வேண்டும் என்கிறகாலம் வரைக்கும் இருக்க வகை செய்யவும் நேரு அளித்த வாக்குறுதியை ஏற்றுச் செயல்படுத்த லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் ஒரு வாக்குறுதி அளித்தார்!

கடந்த கிழமை, இந்திய நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதா — இரண்டு கிழமைகளாக இந்தியத் துணைக்கண்டத்து அரசியலை எங்கே அழைத்துச் செல்கிறது என்பதனையும், இதிலே இந்திக்காரர்களின் பங்கு எந்த அளவுக்கு இருந்துகொண்டிருக்கிறது என்பதனையும் இணைத்துப்பார்!

அதற்கு முன்னதாக — நேருவின் வாக்குறுதி யாருக்கு வழங்கப்பட்டது என்பதையும் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த வாக்குறுதி, இந்திமொழிபற்றிய விவகாரம் சூடுபிடித்தவேளையில், இந்தி பேசாத பகுதி மக்கள் எரிமலையாகக் குமுறத் தொடங்கியபோது, இந்தி பேசாத பகுதி மக்களுக்காக தரப்பட்டதாகும்! இந்தி பேசாத மக்களுக்குத்தான் நேருவும், சாஸ்திரியும் வாக்குறுதி அளித்தனர்.

இந்த வாக்குறுதி கொடுக்கப்படு முன்னதாகவே, இந்திக்காரர்களின் சுயவடிவம் தெற்றெனத் தெரியத் தொடங்கிய காரணத்தாலேயே நேரு 1959-ல். பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்னைக்கு முடிவுகாணும் பொறுப்பை இந்தித் தெரிந்தவர்களிடம் விடமாட்டேன்! தெரியாதவர்களிடமே விடுவேன் என்றார்.

ஆங்கிலம்பற்றிய தொரு முடிவை எடுக்க, இந்திக்காரர்களை நாடமாட்டேன் என்றார் நேரு 1959-ல் ஆனால், இந்தியுடன் ஆங்கிலமும் இணைந்திருக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தத்தில்—நடந்துகொண்டிருப்பது என்ன?

மொரார்ஜிதேசாய் என்ற இந்தி வெறிபிடித்த ஒருவர், நேரு இந்த அறிவிப்பை வெளியிட்டபோது, நேருவின் அமைச்சரவையில் பொறுப்பு மிக்க அமைச்சரவை அந்தஸ்துள்ள ஒரு அமைச்சர்.

சேத்கோவிந்ததாஸ் அப்போதும் ஒரு எம். பி. ஜனசங்கத்துக்கு அன்றும் உயிர் இருந்தது. பி. சோ. வும், ச. சோ.வும்கூட பிறந்து இருந்தன.

மொரார்ஜியோ, சேத்கோவிந்ததாசோ, பிற குறிப்பிட்ட கட்சி உறுப்பினர்களோ, அன்றும் இன்றும் முழுக்க முழுக்க இந்திக்கு வால்பிடித்து அல்ல—அதனை இந்தியத் துணைக்கண்டம் பூராவும் பரப்பி, அதன் மூலம் தங்கள் நிரந்தர வாழ்வுக்கு இடம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற மன அரிப்புடன் செயல்பட்டு வந்தவர்களேயாவர்.

இந்திக்காரர்களிடம் விடமாட்டேன் என்று நேரு கூறியபொழுது இவர்கள் எல்லாம் உயிரோடும் உணர்வோடும்தான் இயங்கினார்கள்.

சேத் கோவிந்ததாசுக்குக்கூட உயிர் இருந்தது; உணர்வு இருந்தது!

''அரசியல் சட்ட சாசனத்தைவிட நேருவோ, அவர் வாக்குறுதியோ முக்கியமானது அல்ல''

என்று இன்றைக்கு இதே சேத் கோவிந்ததாஸ்தான் பேசுகிறார்.

இந்தி வெறியின் உச்சக்கட்டம், நேருவை முக்கிய மானவராகக் கருத, அவர் மனம் இடந்தரவில்லை யென்றால், அதுபற்றி நமக்கு அக்கறை இல்லை.

தனியொரு மனிதரை, ஏற்றுவதோ போற்றுவதோ' தூற்றுவதோகூட அவரவர் விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்ததாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் பதவிப் பொறுப்பில் இருந்தவர் நேரு.

விழிப்பார்வைக்கும், சுட்டுவிரல் அசைவுக்கும் ஒவ்வொரு பொருளை, ஒவ்வொரு கட்டளையைக் கண்டு செயல்பட வேண்டிய இடத்திலே உட்காரவைக்கப்பட்டிருந்தவர் நேரு.

அகில உலக ஜோதியென்றும், ஆசியாவின் சமாதானத்தூதர் என்றும், ஜனநாயகக் காவலர் எனவும், சுதந்திர ஒளி என்றும் பஞ்சசீலம் தந்தவர் என்றும், பாரதத்தின் வழி காட்டி எனவும் கூறப்பட்டவர் நேரு.

மணிக்கு ஒரு ஊருக்கு, நாளுக்கு ஒரு நாட்டுக்கு என்று பறந்துபோய் அறிவுரைகூறி அல்லது கேட்டு வந்துகொண்டிருந்தவர் நேரு.

காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக இந்தியத் துணைக்கண்டத்தில் ஒருவர் அனைத்துலகப் பெரிய மனிதர்களாலும் பெயர் தெரிந்தவராக இருந்தவர் நேரு.

உலக வரலாறு மூலமும், இப்போதைய பிரதமருக்கு எழுதிய கடிதங்களின் பிரசித்த மூலமும், உலக இடத்தைப் பிடித்துக்கொண்டவர் நேரு.

இந்திய சுதந்திரப் போரின் சிந்தனைகளைப்பற்றி வெளிநாட்டார் எண்ணிப் பார்க்கிற வேளைகளில், நேருவின் சிந்தனைகளை எடுத்துக்காட்டுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்குத் தன்னை தன் அறிவால் புலப்படுத்திக் காட்டிக்கொண்டவர் நேரு.

இத்தகைய நேருவை, சேத் கோவிந்ததாசோ வேறு யாராக இருந்தாலும் முக்கியமான ஒருவர் என்று கருதாமலிருப்பதிலோ, கருதித்தான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதிலோ நமக்குப் பொறுப்பேதுமில்லை.

இந்தியப் பிரதமர் என்ற நேருவையும், அந்த பதவியில் இருந்துகொண்டு இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதிகளையும் முக்கியமானவை என்று எந்த ஒருவரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

என்று எடுத்துக் காட்டுவதில் நமக்குப் பொறுப்பு மிகுதியும் உண்டு.

நேருவின் வாக்குறுதி என்பதனைப் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டிய நேரத்தில் 'இந்தி தெரிந்தவர்களிடம் விடமாட்டேன்' என்று அவர் கூறி இருப்பதனையும் ஒன்றாக இணைத்து உனக்கும், உன்போன்றவர்க்கும் புலப்படுத்திக் காட்ட வேண்டாமா?

நண்பா! இந்தி பேசப்படாத பகுதி மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்குத்தான் சில பல திருத்தங்களைச் செய்து இப்போது நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு வைத்துள்ளார்கள்.

இதிலே இந்திக்காரர்கள் பேசுகிற பேச்சும், தருகிற திருத்தங்களும் நடத்தி முடித்த—நடத்திக்கொண்டிருக்கிற அராஜக—வன்முறைச் செயல்களையும் கண் திறந்து, பார்!

இந்தியை ஆட்சிமொழியாக்குவது பற்றிய சர்ச்சை எழுந்தபோது, வங்காளத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் எழுந்து, வங்க மொழியையே நீங்கள் ஆட்சிமொழியாக ஏன் தேர்ந்தெடுக்கக் கூடாது? என்று கேட்டிடார் அன்று.

அதுபோல்கூட தமிழகப் பிரதிநிதிகள் எவரும் தமிழையே ஏன் நீங்கள் ஆட்சிமொழியாக ஏற்கக் கூடாது என்று கேட்கவில்லை.

இந்தி பேசாத வேறு எந்தவொரு மாநிலத்தவரும் கூட கேட்கவில்லை.

இணைப்பு மொழியாக ஆங்கிலத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றுதான் கூறினார்கள்.

அந்த ஓங்காரக் கூச்சலின் உத்வேகம்தான், நேருவின் வாக்குறுதி.

இந்த வாக்குறுதியைச் சட்ட சம்மதமுடையதாக்க வேண்டும் என்ற கோரிக்கைகூட நண்பா, இந்தி பேசாத பகுதி மக்களிடமிருந்துதான் அன்றும், இன்றும் எழுந்திருக்கிறது.

இந்தி பேசாத பகுதி மக்களின் கோரிக்கைக்குதான் மத்திய அரசு காது கொடுத்து சட்டமாக்கவும் முன் வந்திருக்கிறது.

பசிக்கிறது என்று கேட்பவர்களுக்குத்தான் உணவு பறிமாறப்படுகிறதேயொழிய, புசித்துவிட்டு ஏப்பம்விட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு அல்ல;

பசிக்கிறவனுக்குப் பறிமாறப்படும்போது, புசித்தவன், பசித்தவனுக்கு அதுபோடாதே—இதுபோடாதே! கூட்டு வேண்டாம்! சாம்பார் போடு! பச்சடி போடாதே! பருப்பு தராதே! ரசம் ஊற்று; தயிர் படைக்காதே!!

என்றால் என்னபொருள்? அப்படிக் கூற யார் அவர்கள்?

இந்திய அரசின் இப்போதைய நிலை, இந்த வாக்குறுதியைச் சிதைத்து சின்னாபின்னப்படுத்தி இருக்கும் தன்மை, பருப்பு போடாதே—ரசம் ஊற்று என்று கூறியவர்கள் சொன்னபடி செய்திருப்பதுதான்!

இத்தனையையும் செய்துவிட்டு, தங்கள் மீது ஆங்கிலம் திணிக்கப்படுவதாகப் போலியான குரல்கொடுத்துவிட்டு வன்முறைகளிலும் ஈடுபடுகின்ற அளவுக்கும், நேரு முக்கியமானவர் அல்ல என்ற அளவுக்கும் வருகிறார்கள் என்பது, வியப்புக்குரியது அல்ல—வேதனையுடன் சிந்திக்க வேண்டியதாகும்!

யாருக்காக வாக்குறுதி அளிக்கப்பட்டதோ, அவர்களது நலனும் உரிமையும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காகவல்லவா—சட்டவடிவம் வேண்டும் எனக் கோரப்பட்டது.

அப்படிக் கோரியவர்களது நலனுக்கும் உரிமைக்கும் பேரம் பேசுகின்ற அரசியல் மோசடியை எத்தனைக் காலமாக இந்தி பேசுவோர் கருவாக்கி வந்தார்கள்?

இந்திபேசுவோரிடம் இந்தவிவகாரத்தை
விட மாட்டேன்

என்று நேரு கூறியபோது எங்கே போயிருந்தார்கள் இவர்கள்? எங்கே தூங்கிக்கொண்டிருந்தது இவர்களது மொழியுணர்ச்சி?

இவையும், இவைபோன்ற வன்முறைகளும் அவரவரது உரிமையோ அல்லவோ, ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிகிறது.

இந்தியின் நுழைவுக்கும், அதன் மூலம் ஆங்கில ஒழிப்புக்கும் அவைகளின் ஆதிக்கக் கெடுபிடிகளுக்கும் கால்கோலப்பட்ட நாளிலிருந்து இதனை வங்கமும், தமிழகமும்தான் உணர்ந்து எடுத்துக்காட்டிக் கண்டித்து வந்துள்ளன.

நேருவையும், அவரது வாக்குறுதியையுமே மதியாதவர்களால், இந்தக் கண்டனங்கள் எதுவும் மதிக்கப் பெறும் என்று நிச்சயம் நம்ப முடியாது.

1965–ல் இந்திக்கு ஆட்சிமொழி அந்தஸ்து வந்துவிட்டது என்பதை அரசியல் சாசனம் பிரகடனப் படுத்தியபோது—

தமிழகத்தில் உயிர்கள் பலிபெறப் பட்டன. மிருகங்களைப்போல வேட்டையாடப் பட்டனர் மக்கள். ஆட்சியினரால் புகைவண்டிகள் சில பொசுங்கி இருக்கிறது—கட்டிடங்கள் சில தீவாய்ப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் சிலர்முடமாக்கப்பட்டிருக்கிறார்கள். வன்முறையாளர்கள் சிலரால்,

தனியொரு மனிதரின் ஆணவமிக்கப் போக்கின் எதிரொலியாக நிகழ்ந்துவிட்ட விரும்பத்தகாத நிகழ்ச்சிகளின் எதிரொலியாக,

கேரளத்தில்,

கர்னாடகத்தில்,

ஆந்திராவில்,

வங்கத்தில்

எல்லாம் இதே மாதிரியான இந்தி எதிர்ப்பு உணர்ச்சியும், மக்களது ஆவேசமும், தலைதூக்கி நின்றது.

அப்போதுதான் அவசரம் அவசரமாக 14 மொழிகளுக்கும் தேசிய அந்தஸ்து என்று பிரகடனப்படுத்தினார்கள், டில்லித் துரைத்தனத்தார்!

போதுமா? போதாது என்பதன் எதிரொலிதானே நேருவின் உறுதிமொழிக்குச் சட்ட சம்மதம் கேட்டது?

கொடுக்க வருகிறார்கள் — பிச்சை கொடுப்பதைப்போல!

தயிர் வேண்டாம், ரசம் போட்டுக்கொள் —பருப்பு வேண்டாம் துவையல் வைத்துக் கொள் என்பதுபோல!

எந்த ஒருவரது குறுக்கீடுகளுக்கு இடம்தரமாட்டேன் என்று நேருகூறினாரோ, அந்தமொழியினரது ஆர்ப்பாட்டம் அளவுக்கதிகமாக இருக்கிறது.

இந்தி பேசாதவர்களுக்கும் இதயங்கள் உண்டு என்பதோ—அந்த இதயங்களுக்கு எண்ணங்களை ஈன்றெடுக்கும் வன்மையுண்டு என்பதோ இந்தி பேசுவோர்க்கும், மத்திய அமைச்சரவையினருக்கும் தெரியாமலிருக்க முடியாது,

1965-ல் இந்தி எதிர்ப்புப்போர் நடாத்தியவர்கள் முழுவதும் சுட்டுக் கொல்லப்பட்டு விடவில்லை; பலர் உயிரோடு இருக்கிறார்கள்.

என்று ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்திலேயே குறிப்பிட்டுள்ளார்கள்.

அண்மையில்கூட, அறிஞர் பெருந்தகை அவர்கள், பிரதமர் இந்திரா அம்மையாரின் தமிழக வருகையின் போது—

"இந்தி பேசாத பகுதி மக்களின் உணர்ச்சி மதிக்கப்படவில்லையானால், அதனால் எழும் நிலைமையை எந்த ஒருவராலும் கட்டுப்படுத்த முடியாது."

என்று அறிவித்தார்கள்!

அதற்குப் பிறகுதான்—வாக்குறுதி சட்ட வடிவம் பெற்று வந்திருக்கிறது. எலும்புத் துண்டுதான்! பொறுக்கிக் கொள் என்பதுபோல!!

1965-ம் ஆண்டு தமிழக இந்தி எதிர்ப்பு உச்சகட்டப் போரின்போது :வடக்கே—ஆசார்ய வினோபாபாவே, இதனைத்தடுத்துநிறுத்தவேண்டும் என்பதற்காக உண்ணா நோன்பு இருக்கவேண்டும் என்று அவரது அந்தராத்மா அவருக்கு அறிவுறுத்தியதாம்! ஐந்து நாட்கள்கூட உண்ணாமலேயே நோன்பு இருந்தாராம்!

அந்த ஆசார்ய வினோபாபாவே சொல்கிறார்:

"—பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சி மொழித் திருத்த மசோதா நேரு, சாஸ்திரி ஆகிய இருவரது உறுதி மொழிகளையும் நிறைவு செய்யக்கூடியதாக அமைந்திருக்கிறது. இப்பிரச்னையில் நானும் ஓரளவுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறேன்."—

என்று கூறிவிட்டு உண்ணாவிரதமிருந்த விவரங்களையும் விளக்கிவிட்டு, இன்றைய இந்தி மொழி விவகாரம் பற்றி—

"இந்தியை அவர்கள் (இந்திக்காரர்கள்) வலியுறுத்தும் விதம் ஒருபோதும் ஏற்கத்தக்கதாயில்லை; அன்பின் மூலமே அதனைச் சாதிக்க முடியும்."

என்கிறார். இந்திக்கு அன்றிலிருந்து இன்றுவரை வக்காலத்து வாங்கிவரும் ஜெயப்பிரகாஷ் நாராயண்—

"ஆட்சி மொழித் திருத்த மசோதா சரியான பாதையில் ஒரு நேரான நடவடிக்கையாகும்."

என்கிறார்!எந்தமசோதாவை?வெறித்தனத்துக்குஆளாக்கப்பட்டு சிதைவு பெறுதிருந்த அசல் நகல் மசோதாவைக் கூறுகிறார் இப்படி. இதனையேதான் வினோபாபாவேயும் உறுதிமொழிகளை நிறைவு செய்யக்கூடியதாக அமைந்திருக்கிறது என்று கூறுகிறார். இவர் மட்டும் இந்தி கூடாது'என்று சொல்பவரோ! அல்லவே! மெள்ள மெள்ள தந்திரமாக இந்தி புகுத்தப்படட்டும் என்று கூறுபவர்தானே!

இவர்களுக்கும் இவர்களைப் போன்றவர்களுக்கும் அசல் மசோதாவே சரியான ஒரு தீர்வு என்று தெரிகிறபோது, வெறித்தனத்துக்குப் பலியாகிப்போன சில

(13-ம் பக்கம் பார்க்க)

பேதையின் குமுறல்!

—[உதைய, மு, வீரையன்]—

அன்புள்ள காத லர்க்கோ
அன்னத்தின் நெஞ்ச அஞ்சல்!
இன்புடன் நாம்சந் தித்த
எண்ணங்கள் ஊச லாட
துன்பமாம் தீயில் வெந்து
துயரத்தால் எழுது கின்றேன்;
என்னையும் மறந்து விட்டே
எப்படி ஊரில் உள்ளீர்?

ஆடவர் உள்ள மெல்லாம்
அன்பிலாக் கல்லே என்று
தேடரும் பாட்டி சொன்ன
[illegible] திருமொழி உண்மை தானோ?
வீடறிந் திடவே நின்று
விளங்கிடும் காதல் வாழ்க்கை
நாடறிந் திடவே இன்று
நங்கையைக் கொல்வ தேனோ?

கன்னலைத் தின்றேன் உங்கள்
கனித்தமிழ் கேட்ட தாலே!
மன்னனைக் கண்டேன் உங்கள்
மயக்கிடும் தோற்றத் தாலே!
மின்னலைக் கண்டேன் உங்கள்
மென்னகைக் கண்ட தாலே!
'என்னவர்' என்றி ருந்தேன்
யாரவர் ஆகிப் போனீர்?

சின்னவோர் பொருள்ம றந்துத்
தெரியாமல் எடுத்துப் போனால்
முன்னாலே பாய்ந்து வந்து
'முழுத்திரு டன்'தான்' என்று
சொன்னாலும் போதா தென்று
சுடச்சுட இழுத்துச் சென்று
நன்றாக நீதி மன்றில்
நாயென நிறுத்து கின்றார்!

உலகத்தில் சிறந்த தென்றே
உயர்ந்தவர் கூறு கின்ற
மலரெனும் பெண்ணின் உள்ளம்
மாபெரும் பொன்சு ரங்கம்
குலவியே திருடிச் சென்றீர்
கோயிலில் நின்று சொல்வேன்;
பலர் இதை அறியார்; நீரோர்
பாவையின் கள்வ ரேதான்!

இப்பெரும் திருட ரானீர்!
ஏனென்று கேட்பா ரில்லை;
தப்புநீர் செய்து விட்டீர்
தருந்ததோர் சான்று நானே!
ஒப்புமா இந்த வையம்?
உருப்படார் நாட்டு மக்கள்!
செப்பவே வெட்கித் தானே
செய்தியை எழுது கின்றேன்!

என்எதிர் நீரோ இல்லை;
என்னுளம் புகுந்து விட்டீர்!
சொன்னசொல் காற்றில் விட்டீர்!
சுகத்தினைத் தந்தீர் இல்லை;
முன்னொரு நாளில் உம்மை
முதன்முதல் கண்ட காட்சி
இன்னமும் மறக்க வில்லை;
எப்படிச் சொல்வேன், அத்தான்?

அரசியல் கூட்டம் ஊரில்
அடிக்கடி நடக்கும்; ஆனால்
பரவிய கூட்டம் காண
பாவைநான் போக மாட்டேன்;
உரமென அறிவைக் கொட்டி
உரைக்கும்உன் பேச்சைக் கேட்டு
மரமென மயங்கி நின்றேன்
மணவிழாக் கூட்டந் தன்னில்!

கூட்டமாம் விழாமு டிந்து
குலைந்துமே கலைந்து சென்றார்;
நாட்டமே சிறிது மின்றி
நான்அங்கு நின்றி ருந்தேன்;
வீட்டிற்குப் போகும் போதில்
வீரனே, என்னைக் கண்டாய்!
ஓட்டமாய் ஓடி விட்டேன்;
ஒப்பிலா வெட்கத் தாலே!

முகஎழில் ரோசா வுக்கு
முள்ளினை ஏன்ப டைத்தான்?
அகன்றவோர் கடலுக் கிங்கே
அலைகளை ஏன்ப டைத்தான்?
புகழுறு பொன்னைச் சேற்று
பூமியில் ஏன்பு தைத்தான்?
பகிர்ந்திடும் பெண்ணுக் கேனோ
பாழும்நா ணத்தை வைத்தான்?

உம்மிடம் பேச ஆசை
ஓராயி ரங்கள் உண்டு;
செம்மைசேர் பேச்சை போற்றிச்
செப்பவும் எண்ணம் உண்டு;
அம்மாவாம் சனியன் தேடி
அங்கேயே வந்து விட்டாள்!
விம்மிடும் உள்ளத் தோடு
விரைந்துமே ஓடி விட்டேன்!

அன்றைய நிகழ்ச்சிக் குப்பின்
அடிக்கடி கல்லூ ரிக்குச்
சென்றிடும் போதி லெல்லாம்
'செபலகம்' தன்னில் உன்றன்
பொன்திகழ் எழில்மு கத்தை
பூவைநான் கண்ணால் உண்பேன்;
என்னுளம் அங்கு விட்டே
ஏக்கத்தை எடுத்துச் செல்வேன்!

தங்களின் பெயர்கண் டாலே
தவிப்பெலாம் ஏன்தான் தோன்றும்?
எங்குநீர் கலந்து சென்றே
இன்தமிழ் முழங்கி னாலும்
அங்கெலாம் வந்து நிற்பேன்;
அறியாது போலப் போவீர்!
பொங்கிடும் மகிழ்ச்சி யோடு
பொய்ச்சிரிப் பையும் பூப்பீர்!

கண்ணுற வாலே நின்று
கருத்துற வாக மாறி
எண்ணமும் மொழியும் போல
எந்தமிழ் உறவாய்த் தோன்றி
உண்மையாய்க் காதல் ஓங்கி
உடலுற வொன்றும் இன்றி
மண்ணுளே பொன்னைப் போல
மனத்துளே ஒளிந்து வாழ்ந்தீர்!

கார்மழைப் போதில் மின்னல்
கண்ணொளி பிரித்த தைப்போல்
ஓர்பெரும் பயிராய் நானும்
ஒப்பிலா மழையை நோக்கி
சீர்பெற காதல் மேகம்
சிறப்புறப் பெய்யும் போதில்
ஊர்மாற்றல் ஆணை யென்றே
ஓர்மின்னல் பிரித்த தையோ!

அன்றைக்கு மாற்றல் என்றே
அறிவித்தீர்! கண்ணி ரண்டும்
தன்னாலே ஊற்றுப் மாற
தரையினை நோக்கி நின்றேன்;
முன்னிலும் நெஞ்சம் விம்ம
மொழிந்திடப் பேச்சே இன்றி
என்னமாய் ஓடி னேனோ?
எங்குதான் ஓடி னேனோ?

இரவெலாம் என்ற னுக்கோ
இல்லத்தில் தூக்க மில்லை;
வரந்தரும் இறைவன் இன்றி
வானுயர் கோயில் ஏனோ?
சுரந்திடும் ஒளியே யின்றிச்
சுந்தர நிலவும் ஏனோ?
உருவிடும் வாளே இன்றி
உறையென நானும் ஏனோ?

படுக்கையில் விழுந்த போதே
பரவியே கொதிக்கும் காய்ச்சல்
திடுமெனத் தோன்றி நாள்கள்
தெரியாமல் நகர்ந்த தாங்கே!
ஒடுங்கிய துள்ளம்; நின்றே
ஓய்ந்தது படிப்பு; மாதம்
அடுத்தது தோன்றும் போதில்
அடைந்தநோய் தேறி நின்றேன்!

மாற்றலாப் போயி ருந்தீர்!
மடலொன்றும் வரைய வில்லை;
ஏற்பிலா ஒருவ ருக்கோ
என்னையும் மணமு டித்தார்!
முற்றிலும் ஒப்பா மையால்
முதலிர வன்றே ஓடி
சிற்றூராம் உங்கள் ஊரைச்
சென்றுநான் அடைந்தேன்; அங்கே—

எத்தனை ஏமாற் றங்கள்!
ஈடிலா உங்கள் பெற்றோர்
சத்திலா வயதில் மூத்தோர்
சாய்ந்திட இடமே யில்லாப்
பொத்தலின் குடிசை! தங்கள்
புகழுக்கே எதிர்மாற் றங்கள்!
சித்தமே மயங்கி, தாங்கள்
சென்னையில் இருப்பக் கேட்டேன்;

உலகினை உயரச் சொன்னீர்!
உங்களை உயர்த்த வில்லை;
மலர்தமிழ் நினைக்கச் சொன்னீர்!
மங்கையை நினைக்க வில்லை;
சிலதினம் கழித்து ஊர்க்குச்
சென்றேன்;அங் கெனைம ணந்தார்
பலரின்முன் அவமா னத்தால்
பாரினை நீத்தி ருந்தார்!

அன்னவ ருக்கும் என்றன்
அஞ்சலி செலுத்தி விட்டு
பின்னும்என் இல்லம் சென்றேன்;
பெற்றவர் விரட்டி விட்டார்;
என்னதான் கூறி னாலும்
ஏற்றிட வில்லை; இன்னும்
கொன்றிடும் துயரால் உங்கள்
குடிசையை வந்த டைந்தேன்!

நித்திலம் காணேன்; ஆனால்
நெகிழ்த்திய சிப்பி கண்டேன்;
முத்தெனக் குஞ்சைக் காணேன்;
முட்டையின் ஓட்டைக் கண்டேன்;
இத்தரை வாழ்வைத் தந்தே
ஈன்றவ ரான உங்கள்
சொத்தெனும் பெற்றோ ருக்குத்
தூய்பணி செய்தே வாழ்வேன்!

கொம்புத்தேன் அடைய மாட்டான்
குச்சியைச் சுவைக்கும் இன்பம்,
உம்மைநான் அடையா மையால்
உற்றவர் பேணும் இன்பம்!
தெம்பிலா உள்ளத் தோடும்
தேங்கிய கண்ணி ரோடும்
இம்முறை எதிர்பார்க் கின்றேன்
இப்படிக் குங்கள் அன்னம்!

என் மகனா நீ?

நீ. த. வே.

வீட்டின் முன் குதிரை வண்டி ஒன்று வந்து நிற்கிறது. வண்டியிலிருந்து ஓர் இளைஞன் இறங்குகிறான். இறங்கி வீட்டினுள் நுழைகிறான். வீட்டினுள் நுழையும் அவனை வாய் நிறையச் சிரித்து 'வாருங்கள் மாமா!" என்று ஓர் இளம்பெண் வரவேற்கிறாள். இளைஞனின் கையிலிருந்து பெட்டியை உரிமையோடு வாங்கிக்கொண்டு உள்ளே செல்கிறாள். சென்று, "பாட்டி! பாட்டி!" என்று அழைத்து "மாமா வந்துவிட்டார் பாட்டி!" என்று பூரிப்போடு தெரிவிக்கிறாள். அதனைக் கேட்ட மூதாட்டி ஒருத்தி உள்ளேயிருந்து வந்து அந்த இளைஞனை உற்றுப் பார்க்கிறாள். உற்றுப் பார்க்கும் மூதாட்டியை நோக்கி, 'அம்மா! என்னைத் தெரியவில்லையா? உங்கள் மகன் குமரன்தான் அம்மா நான்! பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிடவே என்னை அடையாளம் தெரியவில்லை போலிருக்கிறது!" என்கிறான் அந்த இளைஞன். "பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் என்ன? இருபது முப்பது ஆண்டுகள் ஆயினும் ஒரு தாய்க்குத் தன் மகனை அடையாளம் கண்டுகொள்ள முடியும். ஆனால், என் மகனா நீ? இல்லை! இல்லை! என் மகன் இல்லை நீ! இங்கே வந்து யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்?" என்று சற்றுச் சினத்தோடு வினவுகிறாள். மூதாட்டி, "பாட்டி! என்ன இது? இப்படிப் பேசுகிறீர்களே! மாமாதான் பாட்டி! மாமாவேதான் இவர்!" என்கிறாள் அந்த இளம் பெண். "இல்லை! இல்லை! என் மகனை எனக்குத் தெரியாதா? இவன் எவனோ? இங்கே வந்து நம்மை ஏமாற்றப்பார்க்கிறான்!' என்கிறாள் மூதாட்டி.

"அம்மா! உங்களுடைய மகன் தான் அம்மா, நான்! பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் உங்களிடம் சொல்லாமல் ஓடிப் போனேனே. உங்களுக்கு நினைவு இல்லையா? நான் அப்படிப் போனபோது பொன்னியிடம் மட்டும் "நான் எங்கேனும் கண்ணுக் கெட்டாத தூரத்தில் போய் பொருளீட்டப் போகிறேன். பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் நான் இங்கே திரும்பி வருவேன். வருகின்றபோது நிறைய பணத்தோடு வருவேன்!" என்று சொல்லிவிட்டுப் போனேன். பொன்னியைக் கேட்டுப் பாருங்கள் அம்மா!" என்று இளைஞன் சொல்கிறான். "ஆமாம்! பாட்டி!" என்று பொன்னியும் கூறுகிறாள். "இன்னொன்றும் சொல்கிறேன் அம்மா! நான் பொன்னியிடம் விடைபெற்றுச் சென்றபோது பொன்னி என்ன சொன்னாள் தெரியுமா? 'மாமா நீங்கள் திரும்பி வரப் பத்து அல்ல—பதினைந்து ஆண்டுகள் ஆனாலும், நான் உங்களுக்காகவே காத்திருப்பேன். உங்களைத் தவிர வேறு யாரையும் மணக்கமாட்டேன்!' என்று சொன்னாள்! கேட்டுப் பாருங்கள் அம்மா! பொன்னியை!" என்கிறான் இளைஞன். "ஆமாம்! பாட்டி! மாமா சொல்வது அத்தனையும் உண்மை! மாமாவுக்குத் தந்த அந்த வாக்குறுதியைக் காப்பாற்றவே நான் இத்தனை நாளும் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவந்தேன்! பாட்டி!" என்று பொன்னியும் பேசுகிறாள். என்றாலும் மூதாட்டி ஒரே பிடிவாதமாக "நீ என் மகன் இல்லை! போ! என் மகனை எனக்கு அடையாளம் தெரியும்!" என்று கூறுகிறாள். குமரன் கண் கலங்குகிறான். அவன் கண்ணீரைக் கண்ட பொன்னியின் கண்களும் கலங்குகின்றன.

"அம்மா! உங்களுக்குச் சுமையாக வந்திருக்கிறேன் என்று எண்ணாதீர்கள்! நிறையப்பணம் கொண்டு வந்திருக்கிறேன். இனி நீங்கள் ஆப்பம் சுட்டு விற்றுப்பிழைக்கத் தேவையில்லை. சும்மா இருந்து சாப்பிடலாம் அம்மா! உங்களைக் காப்பாற்றவே நான் வந்திருக்கிறேன். இனி என்றென்றும் உங்களை விட்டுப் போக மாட்டேன்! உங்களிடம் அன்று சொல்லாமல் ஓடிப் போனதற்கு என்னை மன்னித்துவிடுங்கள் அம்மா!" என்று குமரன் வேண்டுகிறான். மூதாட்டி அவன் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை. "நீயும் வேண்டாம்! உன் பணமும் வேண்டாம்! நீ யாருடைய மகனோ? ஒருநாளும் நீ என் மகன் ஆகமாட்டாய்! என் மகனை எனக்கு நன்றாகத் தெரியும்!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறாள் மூதாட்டி.

உள்ளம் பாகாய் உருக, கண்ணீர் அருவியாகி ஒழுக, நின்றுகொண்டிருக்கும் பொன்னி தன் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். துடைத்துக்கொண்டு "மாமா! இனிப் பாட்டியிடம் பேசிப் பயனில்லை. என்னுடன் எங்கள் வீட்டுக்கு வாருங்கள். அம்மாவும் அப்பாவும் எளிதில் அடையாளம் கண்டுகொள்வார்கள். பிறகு அவர்கள் வந்து பாட்டிக்குச் சொல்லி நம்பிக்கை ஏற்படுத்துவார்கள்!" என்று பொன்னி முன் நடக்கக் குமரன் அவளைப் பின் தொடர்கிறான் வழியெல்லாம் பொன்னியும் குமரனும் பேசிக்கொண்டே செல்கிறார்கள்.

"பொன்னி! நீ இன்னுமா திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கிறாய்?" என்று குமரன் கேட்கிறான். "ஏன்? உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதோ?" என்கிறாள், பொன்னி! "இல்லை! பொன்னி! நான் திருமணமே செய்துகொள்ளாமல் இருந்துவிடலாம் என்று பார்க்கிறேன்." என்கிறான் குமரன். "அப்படியானால் நானும் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்துவிடுகிறேன்" என்று துயரத்தோடு சொல்கிறாள் அவள். "பொன்னி! எதற்கெடுத்தாலும் அழுதுவிடுகின்ற குணம் அப்படியே இன்னும் உன்னிடம் இருக்கின்றதே!" என்று சிரிக்கிறான். "என்னை அழவைத்துச் சிரிக்கின்ற குணமும் உங்களிடம் அப்படியேதானே இருக்கிறது!" என்கிறாள் அவள். "என் அம்மா எப்படி என்னைத் தெரிந்துகொள்ளவில்லையோ, அப்படியே என் அக்காவும் மாமாவும் என்னைத் தெரிந்து கொள்ளவில்லையென்றால் என்ன

செய்வது?" என்ற கேள்வியை அவன் எழுப்புகிறான். "என்ன செய்வது இத்தனை ஆண்டுகளாக எந்த ஊரில் வாழ்ந்தீர்களோ அந்த ஊருக்குப் போய்விடுவது!" என்கிறாள் அவள். "அதுதான் எனக்கும் சரியென்றுபடுகிறது. அப்படி நான் போகின்றபோது நான் கொண்டு வந்திருக்கும் பணத்தையெல்லாம் உன்னிடமே கொடுத்துவிட்டுப் போகப்போகிறேன். நீ கொஞ்சம் உன் பிடிவாதத்தைத் தளர்த்தி உன் அப்பாவும் அம்மாவும் பாட்டியும் பார்த்து செய்துவைக்கும் திருமணத்துக்கு நீ இசைந்து கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். கல்யாணம் செய்துகொண்டு நீ நன்றாக வாழவேண்டும். என்ன?" என்கிறான் அவன். "நான் என்ன சொன்னேன்? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அம்மாவும் அப்பாவும் பாட்டியைப்போல் மனம் தடுமாறி உங்களை அடையாளம் தெரிந்து கொள்ளவில்லையென்றால் நீங்கள் இத்தனை ஆண்டுகளாக எந்த ஊரில் இருந்தீர்களோ அந்த ஊர்க்கே, நாம் இருவரும் போய்விடுவது என்று சொன்னேன். என்னை இனிமேல் இங்கே விட்டுவிட்டு நீங்கள் போகவே கூடாது. அப்படிப் போனால் மறுநாளே பொன்னி இந்த உலகத்தை விட்டுப் போய்விடுவாள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!" என்கிறாள் அவள். அதற்கு மேல் அவனால் ஒன்றும் கூறமுடியவில்லை. பேசாமல் நடக்கிறான்.

"அம்மா! மாமா வந்துவிட்டார்! மாமா வந்துவிட்டார்!" என்று கூறிய வண்ணமே பொன்னி சிறு குழந்தைபோல் துள்ளிக் குதித்து வீட்டினுள் செல்கிறாள். பொன்னியின் தாய் வந்து பார்க்கிறாள். "தம்பி! வந்துவிட்டாயா? வாடா கண்ணா! வா!" என்று வரவேற்று "யாரிடத்திலும் சொல்லாமல் கொள்ளாமல் இப்படி எங்கேயோ போய், பத்துப்பன்னிரண்டு ஆண்டுகளாக ஒரு கடிதம்கூடப் போடாமல் இருந்துவிட்டாயே! இருக்கலாமா? நீ செத்துப்போய் இருப்பாய் என்றல்லவா நாங்கள் எல்லாம் எண்ணிக்கொண்டிருந்தோம்!" என்கிறாள். குமரன் கண்களில் நீர்மல்க "அக்கா நான் செத்துப்போய் மறுபிறப்புதான் எடுத்து வந்திருக்கிறேன்! என்கிறான். "ஏதோ வந்து சேர்ந்தாயே! இனிமேல் ஒழுங்காக இங்கேயே இருந்துவிடவேண்டும். கடைசிக்காலத்திலாவது அம்மாவுக்குத் துணையாக இருக்கவேண்டும்" என்கிறாள் பொன்னியின் தாய். அதற்குள் பொன்னி குறுக்கிட்டு "அம்மா! மாமாவைப் பாட்டிக்கு அடையாளமே தெரியவில்லை. என் மகனா நீ? இல்லை! இல்லை! என் மகனே இல்லை என்று சொல்கிறார்கள்" என்கிறாள். "பாட்டிக்கு வயதாகிவிட்டதல்லவா? யாருக்கும் வயது ஆகிவிட்டாலே அப்படித்தான்!" என்று தாய் தன் மகளுக்கும் தம்பிக்கும் ஆறுதல் சொல்கிறாள்.

வெளியே சென்றிருந்த பொன்னியின் தந்தை வருகிறார். வருகின்றபோதே "யார்? குமரனா? எப்போது வந்தாய்?" என்று கேட்டுக்கொண்டே வருகிறார். "எங்களைப் பற்றியெல்லாம் உனக்கு இன்னும் நினைவு இருக்கிறதா என்ன? மறந்துபோய்விட்டிருப்பாய் என்றல்லவா நாங்கள் எண்ணிக்கொண்டிருந்தோம்!" என்று சொல்கிறார். "எப்படி மாமா மறக்கமுடியும்?" என்கிறான் குமரன். "மறக்காமல்தான் மாதத்துக்கு ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தாய்போலிருக்கிறது!" என்கிறார் அவர். "மன்னிக்கவேண்டும் மாமா! ஊரைவிட்டுப்போனபின் ஒரு கடிதம்கூட எழுதாமல் இருந்தது தவறுதான்! பொருத்தருள வேண்டும்!" என்கிறான் அவன்.

"அது கிடக்கட்டும், இத்தனை ஆண்டுகளாக எங்கே என்னசெய்துகொண்டிருந்தாய்? இப்போதுஎன்ன வேலையில் இருக்கிறாய்?" என்று பொன்னியின் தந்தை மேலே வினவுகிறார். "ஊரைவிட்டுப்போன முதல் இரண்டு ஆண்டுகள் எங்கெங்கோ அலைந்து ஏதேதோ வேலைகளைச் செய்தேன். முடிவில் எனக்கு ஒரு நல்ல நண்பன் கிடைத்தான். அவனும் நானுமாகச் சேர்ந்து வடக்கே வெகுதூரத்திலுள்ள ஓர் ஊரில் ஒரு சிறிய கடைவைத்து வியாபாரம் செய்யத் தொடங்கினோம். பத்து ஆண்டுகளில் பெரிய வியாபாரிகளாகி இருபதினாயிரம் ரூபாய்கள் வரை சேமித்தோம். திடீரென்று போன மாதம் என் ஆருயிர் நண்பன் இறந்துவிட்டான். அவன் இறந்துவிடவேதான் நான் வியாபாரத்தை விட்டுவிட்டு இருபத்தையாயிரம் ரூபாய்களுடன் புறப்பட்டு வந்துவிட்டேன். இனி இங்கேயே ஏதேனும் ஒரு வியாபாரம் செய்து பிழைக்கலாம் என்று இருக்கிறேன்!" என்கிறான் குமரன். "இருபத்தையாயிரம் ரூபாய்களுடனா நீ வந்திருக்கிறாய்? மெய்தானா?நம்பவே முடியவில்லையே!" என்கிறார் பொன்னியின் தந்தை. "சேமிப்பு நிதிப் புத்தகத்தைக் காட்டுகிறேன், அதைப் பார்த்தபிறகு நம்புங்கள் மாமா!" என்கிறான் குமரன். இந்தப் பேச்சையெல்லாம் கேட்டவாறு குமரனையே பார்த்துக்கொண்டிருக்கும் பொன்னிக்கு பெருமை தாங்கவில்லை! பூரித்து மகிழ்கிறாள்

பொன்னியின் தந்தையும் தாயும் குமரனின் தாயிடம் வந்து "அந்த இளைஞன் குமரனேதான்!" என்று கூறுகிறார்கள். பொன்னியும் "இவர் நம் மாமாவேதான்பாட்டி! நம் மாமாவேதான்!" என்கிறாள். குமரனும் கடந்த கால நிகழ்ச்சிகள் பலவற்றை எடுத்துக் கூறுகிறான். "ஒரு முறை நான் சின்ன வயதில் அடம்பிடித்து அழுதபோது, மிளகாயை வறுத்து படியில்போட்டு அந்தப் படியை என் முகத்தருகே கொண்டுவந்து என் மூக்கிலும் கண்ணிலும் நெடி ஏறச்செய்து கண்டித்தீர்களே அம்மா! நினைவு இருக்கிறதா?" என்கிறான். "ஒரு முறை நான் ஏரியில் விழுந்துவிட. இராமன் என்கின்ற பையன் என்னைக் கரைக்கு எடுத்து வந்து காப்பாற்றினானே, உங்களுக்கு நினைவு இல்லையா அம்மா? அந்தப் பையன் என்னைக் காப்பாற்றிய மறு ஆண்டிலேயே அம்மை நோய் கண்டு இறந்துவிட்டானே அம்மா அப்போது நான், ஒருநாள் எல்லாம் அவனுக்காக அழுதுகொண்டிருந்தேனே அதை மறந்துவிட்டீர்களா? அம்மா?" என்று கேட்கிறான். "நான் ஆறாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள் இரவு மாமாவின்வீட்டில் திருடன் புகுந்து நெல் மூட்டை ஒன்றை எடுத்துச் செல்ல முயன்றபோது அவனைப்பிடித்துக் கட்டி வைத்திருந்து மறுநாள் காலை அவனைக் கண்டித்துவிட்டோமே அந்த நிகழ்ச்சி உங்கள் நினைவில் இருக்குமே அம்மா?" என்று சொல்கிறான். யார் என்ன சொல்லியும், எவ்வளவு சொல்லியும் மூதாட்டி அந்த இளைஞனைத் தன் மகன் என்று நம்ப மறுக்கிறாள். எனினும் அவன் தன் வீட்டில் தன் மகனைப் போல வேண்டுமானால் இருந்து போகட்டும் என்று சொல்லிவிடுகிறாள். அதுபோதும் என்று ஒருவாறு மன ஆறுதல் பெற்றுக் குமரன் அம் மூதாட்டியின் வீட்டில் தங்கியிருக்கிறான்.

பொன்னிக்கும் குமரனுக்கும் திருமணம் நடைபெறுகிறது. அவர்களுடைய இல்வாழ்க்கை ஊருக்கே ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது. குமரன் ஊரிலேயே வியாபாரம் செய்கிறான். அவனுடைய நாநயத்தையும் நேர்மையையும் யாவரும் போற்றுகின்றனர்.

பொன்னிக்குஒருமகன்பிறக்கிருன். பிறந்து செல்வமாக வளர்கிருன். மழலைச் சொல் பேசித்தளிர் நடை போடுகிருன் குழந்தை. மூதாட்டி அவனைத் தன் கண்ணே போல் காத்து வருகிருள். மூதாட்டியும் பொன்னியும் குமரனும் ஒரே குடும்பமாக அன்போடுதான் வாழ்கிருர்கள். என்ருலும் அம் மூதாட்டிக்குக் குமரன் தன் மகன்தான் என்ற நம்பிக்கை ஏற்படவே இல்லை. குமரனுக்கு அது ஒரு பெரிய மனக் குறையாக இருக்கிறது.

அந்த மனக்குறையால் குமரன் அடிக்கடி சோர்ந்து கிடக்கிருன். பொன்னி அவனுக்கு எவ்வளவோ ஆறுதல் சொல்கிருள். தன் பாட்டியிடம் "என் கணவர் உங்கள் மகனேதான் பாட்டி! நம்புங்கள் என் பேச்சை!" என்று சின்னவயதில் தான் தன் மாமனுடன் விளையாடிய விளையாட்டுகளையெல்லாம், பேசிய பேச்சுக்களையெல்லாம் எடுத்துச் சொல்கிருள். என்னதான் சொல்லியும், மூதாட்டியும் குமரனைத் தன் மகன் என்று கொள்ள மறுத்துவிடுகிருள். குமரனும் தன் மனச் சோர்வை விடாமல் தவித்து வருந்தி வருகிருன்.

மூதாட்டி திடீரெனப் படுத்த படுக்கையாகிவிடுகிருள். மருத்துவர்கள் வந்து பார்த்து "இனிபிழைப்பது அருமை!" என்று சொல்லி விடுகிருர்கள். இப்பவோ இன்னும் சற்று நேரத்திலோ என்று மூதாட்டி இருக்கின்ற நிலையிலும் குமரன் அவளிடம் கண்களில் நீர் மல்க வேண்டுகிருன். "அம்மா! நான் உங்கள் மகன்தான்! என்னை நம்புங்கள்! ஒரே ஒரு முறை "என் மகனே!" என்று அழைத்தால் தான் என் மனம் ஆறுதல் பெறும்!" என்று சொல்கிருன். அப்போதும் அந்த மூதாட்டி "என் மகனு நீ! இல்லை! இல்லை! நீ என் மகன் இல்லை என் மகனை எனக்கு அடையாளம் தெரியும். அவன் செத்துப் போய்விட்டான்!" என்றுகூறுகிருள். குமரன் கதறி அழுகிருன். பக்கத்திலுள்ள மற்றவர்கள் மூதாட்டியைப் பார்த்து "இவரை ஏன் அம்மா நீங்கள் உங்கள் மகன் என்றுகொள்ள மறுக்கிறீர்கள்? உங்கள் மகனை நன்ருக அடையாளம் தெரியும் என்கிறீர்களே! என்ன அடையாளம் வேண்டும் இவரை உங்கள் மகன்என்றுநீங்கள் நம்புவதற்கு!" என்று கேட்கிருர்கள். மூதாட்டி கடைசியாகத் தன் மூச்சை விடுமுன் "என் மகனுக்கு நெற்றியில் ஒரு வடு இருக்கும். இவன் நெற்றியில் வடுவே இல்லை!" என்று சொல்கிருள், சொல்லிவிட்டு கண்ணை மூடிவிடுகிருள். "அய்யோ! அம்மா!" என்று குமரன் கதறுகிருன்.

குமரனைத் தன் மகன் என்று ஒப்புக் கொள்ளாமலே மூதாட்டி இறந்துவிட, பெருந்துயரத்தில் ஆழ்ந்துவிடுகிருன் குமரன். அவனை விட்டுப்பிரியாமல் எப்போதும் உடன் இருந்து பொன்னி ஆறுதல் சொல்லி வருகிருள். சில நேரங்களில் எப்படி ஆறுதல் சொல்வதென்று தெரியாமலும் தவிக்கிருள்.

குமரன் குழந்தையைப்போல் தேம்பித்தேம்பி அழுகிருன். பொன்னியும் உடன் அழுகிருள். 'பொன்னி என் உள்ளத்தில் ஓர் உண்மையை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறேன். அதைச் சொல்லிவிடுகிறேன்! பொன்னி! என்னை மன்னிப்பாயா? என்று குமரன் அழ, "மாமா இதென்னபேச்சு! யாரிடம் யார் மன்னிப்புக்கேட்பது! கள்ளமில்லாதஉள்ளம் உடையவர் நீங்கள் என்பது எனக்குத் தெரியாதா? அப்படி எந்த உண்மையை நீங்கள் உங்கள் மனத்தில் மறைத்துவைத்துக் கொண்டிருக்கிறீர்கள், சொல்லிவிடுங்கள். சொல்லிவிட்டு ஆறுதல் பெறுங்கள். என்று பொன்னியும் அழுகிருள்!

"பொன்னி! மெய்யாகவே உன் மாமன் இறந்துவிட்டான். நான் அவனுடைய நண்பன்தான்" என்கிருன் குமரன். பொன்னி அவன் வாயைப் பொத்தியவாறே "இன்னொரு முறை அப்படிச் சொல்லாதீர்கள். உங்களை நம்பாமல் இருந்த ஒரே ஒருவரான பாட்டி போய் விட்ட பின்னுமா நீங்கள் இப்படிப் பேசுவது?" என்கிருள். அவள் கையை மெல்ல விலக்கிவிட்டுக் குமரன் "பொன்னி உன் மாமன் நான் இங்கு வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னேதான் இறந்துவிட்டான். இறக்கும் தறுவாயில் அவன் "என் அன்னைக்காகவும் பொன்னிக்காகவும் நீ எங்கள் ஊருக்குப்போய் பொன்னியை மணந்து கொண்டு என்றென்றும் என் அன்னையுடன் இருந்து வாழ வேண்டும். நானே தான் நீ என்று எல்லோரும் நம்பும்படி வாழவேண்டும்! என்வாழ்க்கையைப் பற்றி எல்லாச் செய்திகளையும்தான் உனக்கு அவ்வப்போது சொல்லியிருக்கிறேனே! அவற்றையெல்லாம் நீ சொன்ருல் குமரன் நீயேதான் என்று எல்லோரும் நம்பி விடுவார்கள். எனக்காக நீ இந்த உதவியை செய்தே ஆகவேண்டும் என்று என் நண்பன் உன் மாமன்— என்னிடம் உறுதி மொழி வாங்கிக் கொண்டான், எனவேதான் நான் இங்கே வந்து சிக்கிக்கொள்ள நேர்ந்துவிட்டது! என்னை மன்னிப்பாயா? பொன்னி! என்னை மன்னிப்பாயா? என்று கண்ணீர் வடித்தவாறே கேட்கிருன். "மாமா! நீங்கள் என்னதான் கதை சொன்ருலும் நான் நம்பமாட்டேன்! நான் நம்பவே மாட்டேன்! நீங்கள்தான் என் மாமா என்பதில் எனக்குத் துளியும் சந்தேகமே இல்லை. என்றைக்கும் அப்படி ஒரு சந்தேகம் என் நெஞ்சில் தோன்றவே தோன்ருது! என்று பொன்னியும் அழுதுகொண்டே சொல்கிருள்.

அவன் என்ன செய்வான் பாவம்! இனிப் பொன்னியின் கணவன் என்கிற முறையில் மன அமைதி பெற்று வாழ்வதுதான் நல்லது என்ற முடிவுக்கு வருகிருன். தன் கண்ணீரைத் துடைத்துக்கொணடு தன் மனைவியின் கண்ணீரையும் துடைக்கிருன். அப்போது அங்கே குழந்தை வருகிறது. இருவருமே முகமலர்ச்சியோடு குழந்தையை அழைத்துக் கொஞ்சுகிருர்கள்.

வாய்வு சூரணம்
மலச்சிக்கல் மலக்கட்டு, பித்த உஷ்ண வாய்வு, கை கால், இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு, செரியாமை, வயிற்று வலிக்குச் சிறந்தது.
160 கிராம் டின் ரு. 4—00

பூபதி எண்ணை
இருமல், இளைப்பு, ஏங்கல், குத்தல், வரட்டு, புகைச்சல், இருமல், மழைப் பனிக் காலங்களில் வரும் இரைப்பு, மேல் மூச்சு, குணம் செய்யவல்லது,
புட்டி ரு. 7—50

கக்குவான் மருந்து
முதல் நாளிலேயே கக்குவான் கிருமிகளை வெளிப்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தி விரைவில் குணம் செய்யவல்லது.
புட்டி ரு. 2—00

வீரகேசரி மாத்திரை
ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்.
100 பில்ஸ் ரு. 25 50—ரு. 13, 24—ரு. 7.

S. V. R. சன்ஸ் R. I. M. P வாய்வுசூரணம் டிப்போ
தம்மண்ண செட்டி ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

உப டிப்போக்கள்
அமிர்தலால் அண் கோ., 146, நைனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-3
ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர்- (கண்ட்)
ஈ. வல்லராம் நாடார் அண் சன்ஸ், 188-எ தாராவி ரோடு, பம்பாய்-17,
சொக்கலிங்கம் செட்டியார், மருந்துக் கடை திருப்பாபுலியூர், கடலூர் என், டி,
ஆத்மஜோதி நிலயம், நாவலப்பிட்டி, சிலோன்.

7-ம் பக்கத்தொடர்ச்சி

ருக்கு எதனால் திருத்தங்கள் தரவேண்டும் என்று தோன்றுகிறது என்பதைச் சிந்திக்கிறபோது,

(1) இந்தி மாநிலங்கள், பிற இந்தி மாநிலங் களுக்குள்ளே இந்தியிலேயே கடிதத் தொடர்பு கொள்ளலாம்.

(2) இந்தி அல்லாத மாநிலங்களுக்கு ஆங் கில மொழி பெயர்ப்புக் கொடுக்கலாம்

என்பது போன்ற மசோதா பிரிவுகளிலிருந்து எதிர்கால இந்தியாவை இரு கூறுகளாக்கிவிடும் முயற்சியில் மத்திய அரசே ஈடுபட்டுவிட்டது என்றும்,

இந்தியத் துணைக்கண்டத்தை ஒரு நாடு என்ற தன்மையில் காலப்போக்கில் ஆக்கிக்காட்ட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முயற்சியில், டில்லியினர் தங்களை யறியாமலேயே தனித்தனிப் பிரிவுகளுக்கு வழி கோலி விட்டுள்ளனர் என்பதையும் தெளிவாக உணர முடிகிறது!

இந்த அறைகூவலை இந்தி பேசாத பகுதியினர் ஏற்றுத் தீரவேண்டும்! ஏற்றே தீரவேண்டும்!!

"ஒரு இனத்தை அடிமைப்படுத்த வேண்டுமானால், அவ்வினத்தின் மொழியை முதலில் அழித்துவிடு"

என்றான் இத்தாலிய நாட்டு மொழி மேதை இப்பன்ஸ்.

அதைச் செய்வதற்குத்தான் இந்தி ஏகாதிபத்திய வெறியர்கள் கால்கோலிவிட்டார்கள்.

இவற்றின் எதிரொலிகள்தான், வடக்கே, தமிழக எம். எல். ஏ-க்களும், தமிழரும், தமிழ் வணிகர்களும்— தமிழைத் தாய்மொழியாகக்கொண்டோரும் தாக்கப்படுகிறார்கள்.

அராஜகமும், வெறித்தனமும், நேருக்குநேர் சந்திக்கத் தொடங்கிவிட்டன.

இக்கொடுமைகளையும் விளைவுகளையும் இந்தி எதிர்ப்பு உணர்வோடு ஏடுகள், இதழ்கள் நடாத்துவோர் துல்லியமாக விளங்கும்படி அன்றாடம் விளக்கிக் கொண்டே வரவேண்டும். பெரிய அளவுக்குப் பணி நடைபெறவேண்டும்.

தூரதூரப் போய்க்கொண்டிருக்கும் எதிர்ப்பு உணர்ச்சிகளை ஒரு வழிப்படுத்தி முன்னிறுத்த உடனடியாக இந்தி எதிர்ப்பாளர்கள் முன்வரவேண்டும்.

இந்தியையே ஏற்க முடியாது

என்ற அளவுக்குக் குரல் கொடுக்க உடனடியாகக் கூடியாகவேண்டும்.

இந்தியை வேண்டுவோர், இந்தியை வைத்துக் கொள்ளட்டும்;

வேண்டாமென்போர் ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளட்டும்!

இறுதியில், இந்திப் பகுதி — அல்லாத பகுதி என்ற பிரிவு ஏற்பட்டேதீரும்!

சமூகத்தின் பிரச்னைகள்
எத்தனை எத்தனை
கோணங்களில்
பின்னிக்கிடக்கிறது?

அந்தப் பிரச்னைகள்தான்
எத்தனை எத்தனை
நிகழ்ச்சிகளை
உண்டாக்குகின்றன!

அறிஞர் அண்ணா
அவர்களின்

தொடர்கதையில்

இதைத்தான்
படிக்கப்போகிறீர்கள்!

"காஞ்சி"
பொங்கல் மலரிலிருந்து
தொடங்குகிறது!

அப்படி ஏற்படுமானால், அந்த உணர்ச்சிக்கு வித்தூன்றிய பெரும்பழி இந்திக்காரர்களையே சாரும்! இந்திய அரசையே சாரும்!!

இப்பன்சின் தத்துவம் செயலாக்க முனையப்படுகிறது — இடங்கொடுப்பதோ எதிர்த்தழிப்பதோ — எதிர்கால நடைமுறையில்தான் இருக்கிறது!

இணைவார்களோ எதிர்ப்பாளர்கள்? இணைந்து தீர வேண்டும்; இணைக்க முயலவேண்டும் தமிழகத் தலைவர்கள் என்றுதானே நண்பா நீயும் நானும் விரும்புகிறோம்!

அன்புள்ள,
திருவாரூர் முத்துராமன்.

சார், தெரியுமா சேதி?

போராடப்பா போராடு!

சென்னையில் அதிசயப் போராட்டம் ஒன்று நடைபெற்று, வெற்றியும் பெற்றிருக்கிறது! இந்தப் போரட்டம் ஒரு தனி நபர் போராட்டம்!! திருவல்லிக்கேணி பகுதியில் ஒரு தொழுகை தர்காவில் மன்றம் ஒன்று திறப்பது தொடர்பாக எழுந்த பிரச்னையில், ஒருவர் அருகே இருந்த மரத்தின் மீது ஏறிக்கொண்டு, 'மன்றம் திறக்கக் கூடாது; திறந்தால் கீழே விழுந்து செத்துவிடுவேன்!' என்று போராட்டம்நடத்தினார். பொது மக்கள், போலீஸ் அனைவருடைய வேண்டுகோளும் எடுபடவில்லை. இறுதியில் தீயணைப்புப்படை அதிகாரி, தந்திரமாக அவரை கீழே இறக்கினாராம்! மன்றம் தொடங்கும் திட்டமும் கைவிடப்பட்டதாம்! எனவே, இந்தி வெறியர்களுக்கு ஒரு யோசனை. ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவுக்குத் திருத்தம் தெரிவிப்பவர்கள், பாராளுமன்றக் கட்டிடத்தின்மேலே ஏறிக்கொண்டு, போராட்டம் நடத்தலாமே! குதித்து உயிர்விடுவேன் என்று சொல்லலாமே! எதிர்பார்க்கலாமா?

விட்டாரடி, பட்டம் விட்டாரடி!

வீர, தீர, பராக்கிரமங்கள் புரிபவர்களுக்கு அந்தக் காலத்தில் வீர விருதுகள் நல்கி மதிப்புச் செய்வது என்பது வழக்கம். இந்தக் காலத்தில் அறிவியல் துறையில் அசாதாரண சாதனைகளுக்காகப் பட்டமளித்துப் பாராட்டிக்கொண்டிருக்கிறது அகிலம். இந்திய அரசும் இதுபோன்ற சில பட்டங்களை அவ்வப்போது சிலருக்குத் தந்து சிறப்புச் செய்து வருகிறது. காரணங்கள் அரசுக்குச் சரியாகத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் பரிந்துரைகளின்பேரில் பட்டங்கள் வழங்குவது சர்வசாதாரணமாகிவிட்டது! பத்மஸ்ரீ, மத்மபூஷண் போன்ற பட்டங்களே அவை. அதனைப் பெற்றுக்கொண்டோருக்குக்கூட அவற்றின் பொருள் தெரியுமோ என்னவோ! சில கிழமைகளாக இந்தியத் துணைக்கண்டத்தில் தலை தூக்கியிருக்கும் மொழிவெறிக்கு, இந்தப் பட்டங்கள் கூட பலியாகி இருக்கின்றன. வடபுலத்தில் இந்தி எழுத்தாளர்கள் என்பதற்காக கிருஷ்ணதாஸ், அரிசங்கர் என்ற இருவரும் கொடுக்கப்பட்ட பத்மபூஷண், பத்மஸ்ரீ என்ற பட்டங்களைத் துறந்துவிட்டார்களாம். வாரணாசியைச் சேர்ந்தவர்களாம் இவர்கள். இதுபோலவே, உ. பி-யைச்சேர்ந்த அரிசங்கரசர்மா என்பவரும் பத்மஸ்ரீ பட்டத்தைத் துறந்துவிட்டாராம்! இந்திக்கு எதிராக இந்திய அரசு இயங்குவதாக இவர்களது குற்றச்சாட்டு. இன்னும் பலர் பட்டம் துறக்கவும் தயாராகிக்கொண்டிருக்கிறார்களாம்! தமிழகத்திலும் சிலபேர் இதுபோன்ற பட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். இந்தி நுழைவையும், தமிழின் அழிவையும் எதிர்த்து இந்தப் பட்டங்களைத் துறக்கவேண்டும் என்று நாட்டுப்பற்றுள்ள எவரும் எதிர்பார்க்கவே செய்வார்கள். ஆனால், அத்தகைய எவருக்கும் அப்படிப்பட்ட பட்டங்கள் வழங்கப்பட்டு விடவில்லை என்பதுதான் தெரிந்துகொள்ள வேண்டிய சேதி!

தங்கப் பல் நாய்!

ஷராப் கடையிலும், மளிகைக் கடையிலும், ஷாப் கடைகளிலும் புகுந்து புகுந்து ஒருவன் "இஞ்சி இருக்கிறதா இஞ்சி" என்று கேட்டுக்கொண்டே போனானாம்! அதனைக் கவனித்துக்கொண்டிருந்த ஒருவன் ஆத்திரப்பட்டு, 'இஞ்சி காய்கறிக் கடையில் இருக்கும்; நீ இங்கே வந்து கேட்கிறாயே!' என்று சொல்லி, கன்னத்தில் பளார் என்று அறைந்தானாம்! அதன் பிறகுதான் உண்மை புரிந்ததாம், அறைந்தவனுக்கு. இஞ்சி கேட்டவன் புதிதாகத் தங்கப் பல் கட்டிக்கொண்டு வந்திருக்கிறான் என்று. 'இஞ்சி' என்று உச்சரிக்கப்படுகிறபோது பல்லெல்லாம் வெளியே தெரியுமில்லையா! அப்போது தங்கப் பல்லும் தெரியுமில்லையா! தங்கப் பல் கட்டிக்கொண்டவர்கள் என்றால் அவர்களுடைய அந்தஸ்தே தனியாயிற்றே! அந்த அந்தஸ்தைப் பெறத்தான் ஷராப்புக் கடையில் வந்து 'இஞ்சி' கேட்டிருக்கிறான்! இதுபோன்ற அந்தஸ்து பெறுகின்ற யோகம், ஒரு நாய்க்குக் கிடைத்தது என்றால் வியப்பாயில்லையா? தெரிந்துகொள்ளவேண்டிய செய்தி அல்லவா! பல் நோயாளிகள் வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள்! கியூவில் ஒரு உயர்ந்த ஜாதி நாயும் நின்றுகொண்டிருந்தது. அதன் முறை வந்தபோது விசாரித்தால், அது விமானப் படைப் பிரிவைச் சேர்ந்த நாய் என்றும், பயிற்சியின்போது கீழே விழுந்து ஒரு பல் பழுதுற்று விட்டதாகவும், பதிலுக்குத் தங்கப் பல் கட்டிக் கொள்ளவே அது கொண்டு வரப்பட்டதாகவும் தெரியவந்தது! இங்கல்ல இலண்டனில்!

'பன்றி'யால் முடியுமோ!

மனிதர்களுக்குப் பன்றியின் இருதயத்தைப் பொறுத்தி, அவர்களை உயிரோடு வாழச் செய்ய முடியுமாம். மனித இதயம் எளிதில், கிடைப்பதில்லை எனவும் பன்றியின் இதயம், மனித இதயத்தைப் போலவே இருப்பதனால், இதனையே மனிதர்களுக்குப் பொருத்திவிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது கலிபோர்னியாவில், இது செயற்கை இதயத்தைவிட எத்தனையோ மடங்கு சிறப்பானது என்று இதனைத் தெரிவித்துள்ள டாக்டர் ஜேம்ஸ்ஜுடு என்பவர் கூறுகிறார்! மனித இதயம் எத்தனையோ 'இழிவுகளையும் ஆசாபாசங்களையும் ஈன்றெடுக்க வல்லது. பன்றியின் இதயத்தால் அது முடியுமா என்று யாராவது இதயநோயாளிகள் எண்ணத் தேவை ஏற்படுமோ, என்னவோ!

ஒன்றுபடுத்துங்கள்!

"திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே இந்தியை எதிர்க்கவில்லை; ஆங்கிலத்தின் இடத்தில் 'இந்தி' கொண்டுவரப்படுவதை இந்தி மொழி பேசப்படாத எல்லா மாநிலங்களுமே எதிர்க்கின்றன" என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு அவர்களும் சொல்லத் தொடங்கிவிட்டார்! கேரளாவின் இந்தக் குரலை டெல்லியில் அனந்தன் நம்பியாரும், ஸ்ரீ கண்டன் நாயரும் எதிரொலித்துக் காட்டியிருக்கிறார்கள். கர்னாடகத்தில் கூட, மாணவர்கள் கிளர்ச்சி தொடங்கப்பட்டுவிட்ட

தாகத் தெரிகிறது. ஆந்திரா யோசித்துக்கொண்டிருக்கிறதாம்! தலைமையேற்க வேண்டிய வங்கத்தின் கவனம், திசை திருப்பிவிடப்பட்டிருக்கிறது. ஆட்சி அதிகாரம் பற்றிய பிரச்னை முழுதாக வங்கத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதால் மொழிப் பிரச்னை முன்னுக்கு வரவில்லை. எனவே, இந்த எழுச்சியை ஒன்று திரட்டிக் காட்டவேண்டிய பொறுப்பு தமிழகத்துக்கு ஏற்பட்டு விட்டிருக்கிறது.

பொல்லாத அமைச்சர்!

தி. மு. கழகத்தின் படியரிசித் திட்டம் கைவிடப்படலாம் என்ற கருத்தில் காங்கிரஸ் கட்சியின் ஏடு ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. கொஞ்ச நாளில் அத்திட்டம் பரவலாக்கப்படும்போது, ''பாரீர்! பாரீர்! காங்கிரசின் எதிர்ப்புக்கண்டு கழகம் கதிகலங்கிவிட்டது. திட்டம் வந்துவிட்டது! அரிசி பரவலாகிவிட்டது! காங்கிரசால்தான் இத்திட்டம் உயிர் பெற்றது! எனவே, போதையிலில்லாத வாக்காளர்களே, காங்கிரசுக்கு...'' என்று பேசலாம், எழுதலாம் என்ற எண்ணத் தடிப்போ என்னவோ! உணவு அமைச்சர் மதியழகன் பொல்லாதவராக இருக்கிருர்! காங்கிரசின் இந்தப் 'பசி'க்குக் கொஞ்சம் தீனி போடக் கூடாதோ! உடனேயா மறுக்க வேண்டும்! திட்டம் கைவிடப்படவில்லை—பரவலாக்கப்படும் என்று ஏன் கூறிஞரோ, தெரியவில்லை! காங்கிரசின் ஆசைக்கு இதிலுமா மண்விழ வேண்டும்!

காமராசர் ராஜிஞமா?

நாடாளு மன்றத்தின் காங்கிரசுக் கட்சி கூடி, ஆட்சி மொழித் திருத்த மசோதாவுக்குத் திருத்தங்கள் தருவது என்பது பற்றி ஆய்வு நடத்திக்கொண்டிருந்த வேளையில், காமராசர் டெல்லியில்தான் இருந்தார்! அவர் டெல்லியில் இருந்த நாட்களிலேயே இந்த மசோதா சூடான, சுவையான வாதத்துக்கு வந்துவிட்டிருந்தது! பொறுமைக்குப் புகழ்போன அவர், பொறுத்தார், பொறுத்தார், பொறுத்துக்கொண்டிருந்தார்! தமிழகத்துத் தலைநகருக்கும் வந்து சேர்ந்தார் அந்த ஜனநாயக சோஷலிசப் பிதா! வந்ததும் தெரியவில்லை, பெங்களூர் போனதும் தெரியவில்லை! அங்கும் பொறுமை காக்கத்தான் முயன்ருர். முடிகிறதா? விடுகிருர்களா செய்தியாளர்கள்! வாயைக் கிளறி விட்டுவிட்டார்கள் அந்த வம்பர்கள்! ''மொழி மசோதாவில் எந்தத் திருத்தமும் செய்யக்கூடாது; அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்ற கருத்தையும் வெளியிட்டு விட்டார்! போகிற போக்கிலே பொல்லாப்பு எதற்கு? தமிழகம் தானே இனி நம் புகலிடம்! என்ற எண்ணமாகத்தான் இருக்கவேண்டும்! அவரைப் பொறுத்தவரையில் 'வேலி' போட்டுக்கொண்டு விட்டார்! ஆனுல் காங்கிரஸ், காமராசர் பேசிய சூட்டோடு சூடாக திருத்தங்களை ஏற்றுக் கொண்டு விட்டதே! காமராசர் காங்கிரசிலிருந்தே விலகி விடுவாரா என்ன? விலகினுல் அது தெரிந்து கொள்ள வேண்டிய சேதியோ!

இவர்தான் நிஜலிங்கப்பா!

தென்னக மாநிலங்கள் இடையே, ஆட்சி மொழிப் பிரச்னையில் ஏன் ஒரு பொதுநோக்கு இருக்கக்கூடாது? என்பது வினு! விடையென்ன தெரியுமா? ''மும்மொழித் திட்டத்தை ஏற்கெனவே எல்லா தென்னக மாநிலங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன; இப்போது சென்னை மட்டும் பின்வாங்குகிறது. பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப்பாடமாக்கி அதை, மைசூர், கேரளா, ஆந்திரம் அமலாக்கியுள்ளன'' என்பது. சொன்னவர் காங்கிரசுத் தலைவராக்கப்பட்டுள்ள நிஜலிங்கப்பா! எங்கே? டெல்லியில்! பூஜ்யத்தின் ஸ்தான மதிப்பு இடத்துக்கு இடம் வேறுபடும் என்பது கணித சாஸ்திரம்! ஆனுல் நிஜலிங்கப்பா ஒரு 'பூஜ்யமா' என்ன?

இதனுல் தெரிவிப்பது என்னவென்ருல்!

விலை உயர்வுப் பிரச்னையில் இப்போது தமிழகக் காங்கிரஸ் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறது. அவர்களது கவனத்துக்கு மட்டும் இந்தச் செய்தி! இதுவரை கோதுமைக்குக் கொடுக்கப்பட்டுவந்த மத்திய அரசின் உதவித் தொகை, இனி ரத்துச் செய்யப்படும். அதனுல் கோதுமையின் விலை உயரும் என்று டெல்லி உணவு இலாகா மாநில அமைச்சர் சிண்டே தெரிவித்திருக்கிருர். இதுதான் காங்கிரசா? என்று யாரும் கேட்கத் தேவையில்லை!

இயற்கையும் ஏற்கவில்லையோ?

தட்சிண பீடபூமியில் அதாவது பம்பாய், பெங்களூர், ஹைதராபாத் முதலான இடங்களில் கடும் நில நடுக்கம் இருமுறை ஏற்பட்டுவிட்டிருக்கிறது. முதல் தடவையில் 1500 பேருக்கு மேலும், இரண்டாம் தடவையில் 1000 பேருக்கு மேலும் காயமடைந்துள்ளனர். சாவு எண்ணிக்கை 150ஐ எட்டுமாம்! இடங்களை வைத்து அரசியலோடு இணைத்துப் பார்க்கக் கூடாது! என்ருலும் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தியாக்க விரும்பும்போது இணைக்காமலிருக்க முடிகிறதா? பம்பாய் — வங்காளம்! இங்கே காங்கிரசினுல் ஜனநாயகப் படுகொலை செய்யப்பட்டு மனித உரிமைகள் நசுக்கப்பட்டுள்ளன. ஹைதராபாத் — ஆந்திரம்! பெங்களூர் — கர்ஞடகம்! இந்த இரு இடங்களிலும் காங்கிரஸ்! காங்கிரஸ் என்ருல் பூமித்தாய்க்குக்கூடவா பொறுக்கவில்லை! என்ருலும் உயிரிழந்தோருக்கு நம் அனுதாபங்கள்!

நிஜலிங்கப்பாதான்!

பெங்களூர் லால்பாக் தோட்டத்தில், மைசூர் முதல்வர் நிஜலிங்கப்பாவுக்கு 66—வது பிறந்த நாளை முன்னிட்டு, அன்ஞரது நினைவுக்காக—ஒருவகைப் பூச்செடிக்கு நிஜலிங்கப்பா! என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது! ஆமாம், இந்த நிஜலிங்கப்பா ஒரு செடிதான்!

அமைச்சர்களே கைது!

உத்திரப்பிரதேசத்தில், ச. சோ. கட்சியின் அமைச்சர்களான பிரபு நாராயணசிங்கும், ஸ்ரீராம் ஸ்வரூப்வர்மாவும் புதுடெல்லியில் கைது செய்யப்பட்டிருக்கிருர்களாம். தடையுத்தரவை மீறிஞர்கள் என்பது குற்றச்சாட்டு, ஆங்கில எதிர்ப்பு முழக்கங்களோடும் இந்தி ஆதரவு கூச்சல்களோடும் வரும்போது பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு வெளியே இவர்கள் கைது செய்யப்பட்டார்களாம்! சூட்டோடு சூடாக, ராஜ்நாராயண் என்ற ச. சோ. கட்சி எம். பி., உ. பி. அமைச்சர்கள் டெல்லியில் கைது செய்யப்பட்டால் மத்திய அமைச்சர்கள் உ. பி. யில் கைது செய்யப்படலாம் என்று கூறியிருக்கிருர். சுதந்திர இந்தியாவில் அமைச்சர்கள் கைது செய்யப்படுவது இதுவே முதல் தடவை! என்ற இது அல்லவா செய்தி!!

—தொகுப்பு: ராஜிமஞளன்.

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

சித்தர் நவலோக கல்பம்

தங்கம் வெள்ளி, தாம்பரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.

டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

—[REGD]—

307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை:
மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும், டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே
பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும்

நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
... வள்ளி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.